**சி.பிஎண்.46/2024** **07.11.2025**

**ம.த.சாட்சி 1 விஜயகுமாரி குறுக்கு விசாரணை**

தமிழ் எனக்கு படிக்க தெரியும் எழுத தெரியாது. ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது. பிரமான வாக்குமூலத்தில் நான் வழங்கறிஞரிடம் கூறிய விவரங்களை தான் அவர் தட்டச்சு செய்துள்ளார். எதிர் மனுதாரர் நிர்வாகத்திடம் செட்டில்மெண்ட் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் 01.01.2011 அன்று வேலைக்கு சேர்ந்தேன். 10.08.2020 அன்று என்னை பணிநீக்கம் செய்துவிட்டார்கள். தற்போது எதிர்மனுதாரர் நிறுவனம் இயங்கவில்லை. கம்பெனி நஷ்டத்தில் இயங்கியதால் 2020 முதல் இயங்கவில்லை. ம.த.சா.ஆ1 நிர்வாகம் எனக்கு அளித்த செட்டில்மெண்ட் தொகை குறித்த விவரங்கள் ஆகும். 10.08.2020 அன்று நிர்வாகத்திற்கு நான் அளித்த ராஜினாமா கடிதம் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது எ.ம.த.சா.ஆ1. என்னுடைய ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொண்டப்பின்னர் தான் மனுதாரர் தரப்பு சான்றாவணம் 1-ஆன செட்டில்மெண்ட் தொகை குறித்த விவரம் எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். எத்தனை தொழிலாளர்கள் ராஜினாமா கடிதம் அளித்தார்கள் என்று எனக்கு தெரியாது. ம.த.சா.ஆ1-ல் குறிப்பிட்ட தொகையை நான் ஒத்துக்கொண்டு தான் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். ம.த.சா.ஆ4-ல் எதற்காக எனக்கு காசோலை அளிக்கப்பட்டது என்ற விவரம் காணப்படுகிறது என்றால் அந்த கடிதத்தில் இருக்கும் சங்கதிகள் ஆங்கிலத்தில் காணப்படுகிறது எனக்கு யாரும் படித்து காட்டவில்லை. நிர்வாகத்தினர் கம்பெனி நஷ்டத்தில் இயங்கியதால் கம்பெனிக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துகளை விற்று காசோலைக்கான பணத்தை அளிப்பதாக கூறினர் என்றால் சரிதான். அதனை ஒப்புக்கொண்டு தான் காசோலையை நான் பெற்றேன். நிர்வாகம் இதுவரை எந்த சொத்துக்களையும் விற்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய மனுவில் நிர்வாகம் ஒப்புக்கொண்ட தொகையை விட கூடுதல் தொகையை கோரியுள்ளேன் என்றால் சரிதான். கம்பெனி மூடுவதற்கு 1 வருடம் முன்பிருந்தே கம்பெனியில் வேலை குறைந்த காரணத்தினால் மாதத்தில் 10 நாட்கள் எங்களுக்கு விடுமுறை அளிப்பார்கள். வேலைக்கு சென்ற நாட்கள் வரை எனக்கு சம்பளம் சரியாக கொடுத்தார்கள். என்னுடன் எத்தனை நபர்கள் அந்த சமயத்தில் பணிபுரிந்தார்கள் என்று எனக்கு தெரியாது. தொழிற்சாலை சரியாக இயங்காததால் நான் ராஜினாமா கடிதம் கொடுத்தேன் நிர்வாகமும் எங்களுக்கு செட்டில்மெண்ட்

தொகை குறித்த விவரங்களை கொடுத்தது. நிர்வாகம் எந்த காலக்கட்டத்திலும் ஆட்குறைப்பு செய்யவில்லை நானாகதான் ராஜினாமா செய்தேன் என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ1-ன்படி நிர்வாகம் அளிப்பதாக சொன்ன தொகையை விட கூடுதலாக மற்ற தலைப்புகளின் கீழ் நான் பணம் கோருவதால் இந்த மனுவானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எந்த தொழிற்சங்கத்திலும் உறுப்பினர் இல்லை. அதிகப்படியான தொகை கோரியுள்ளதால் இந்த மனு நிலைக்கதக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2025.11.07 16:39:08 +0530